# <u>In the Court of the  District Munsif, Eraniel</u>

**Original Suit No. 24/2025** **Date:31.07.2026.**

**(PW2)- ரெக்சலின் டெய்சி**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு  விசாரணை</u>

1. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்து சம்பந்தமாக வில்லங்கம் பார்த்தேனா என்றால்  பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றிழை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் மற்ற ஆவணங்களை தாக்கல் செய்திருப்பதால் இந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.3 ஆவணம் எனது தந்தை எனக்கு எழுதிவைத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் இருந்த 16.5 செண்ட் சொத்தில் எனக்கு 5.5 செண்ட் சொத்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி 5.5 செண்ட் சொத்தில் ஏதேனும் பாதை உள்ளதா என்றால் இல்லை. மேற்படி 16.5 செண்ட் சொத்து யாருக்கு இடையில் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் எனது தந்தை மற்றும் அவரது உடன்பிறந்த  இரண்டு சகோதரர்களுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டது. 3 சகோதரர்களுக்கும் தலா 5.5 செண்ட் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அதில் நடுவில் உள்ள சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. எனது சொத்திற்கு கிழக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் சூசைமரியானுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி நபருக்கு சொத்து பாத்தியப்பட்டு இருந்த போது அதில் பாதை இருந்ததா என்றால் பாதை இல்லை. இந்த வழக்கின் பி பட்டிகை பாதை சூசைமரியானுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு செல்வதற்கு பி பட்டிகை பாதை அவகாசம் உண்டா என்றால் அது எனது தாத்தாவிற்கு பொதுவில் இருக்கும் வரை உண்டு, தற்போது விற்பனை செய்துவிட்டதால் கிடையாது. எனது சொத்தில் பாதை இல்லாதா போது சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள சொத்திற்கு எவ்வாறு செல்லமுடியும்

என்றால் எனது தாத்தா காலத்தில் மாறி இருந்தது.

4. நான் கிரயம் பெற்ற ஆவணத்தில் பாதை அவகாசம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது சொத்திற்கு மேற்கு பக்கமுள்ள 5.5 செண்ட் சொத்து எனது பெரியாப்பா ஞானபிரகாசத்தின் பெயரில் இருந்தது என்றால் சரிதான், அவர் 1 ஆம் பிரதிவாதியின் தந்தை ஆவார். மேற்படி ஞானபிரகாசத்தின் சொத்தில் பாதை இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி பாதை எவ்வளவு அகலம் என்றால் 139 அடி நீளம், 10 அடி அகலமாகும். ஞானபிரகாசநாடாரின் சொத்திற்கு செல்வதற்கு பாதை உண்டா என்றால் உண்டு. மேற்படி பாதை தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்ற ஆணையர் வந்தபோது அந்த பாதையை காட்டிக்கொடுத்தேனா என்றால் காட்டிக்கொடுத்தேன்.

5. மேற்படி 16.5 செண்ட் சொத்தில் தற்போது எங்கள் கைவசம் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 11 செண்ட் உள்ளது. மேற்படி 11 செண்டில் கிழக்கு பக்கமுள்ள 5.5 செண்ட் மட்டும் தான் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குபடி ஏ பட்டிகை 3 ஆம் இன சொத்து வரை பி பட்டிகை பாதை உள்ளது என்றால் சரிதான். எனது 5.5 செண்ட் சொத்திற்கு மேற்கு பக்கமுள்ள 5.5 செண்ட் சொத்து எனது கணவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் பெயரில் கிரயம் பெற்ற சொத்தின் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி ஆவணத்தில் ஏதேனும் பாதை அவகாசம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு வழிப்பாதை குறிப்பிடப்படாதாததான் நான் மேற்படி ஆவணத்தை நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் சொத்தை கிரயம் பெறும் போது எந்த பகுதியில் காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றால் எந்த பகுதியிலும் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்தபோது எனக்கு

திருமணம் நடைபெற்றதா என்றால் நடைபெற்றிருந்தது. எனது கணவரின் ஊர் என்னுடைய ஊர் என்றால் சரிதான், அவர் எனது சொந்தகாரர் ஆவார். வழக்கு பி பட்டிகை சொத்திற்கு எத்தனை நபர்கள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் 7 பெயரில் பட்டா உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணத்தில் எத்தனை நபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 10 நபர்கள் பெயர் உள்ளது.

7. மேற்படி 10 நபர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், 3 நபர்களை சேர்க்கவில்லை. எனது கட்சியின் படி எனது அப்பா மற்றும் அவரது உடன் பிறந்தவர்களின் வாரிசுகளாக மொத்தம் 18 நபர்கள் உண்டு என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்திற்கு யார் பெயரில் ஆவணங்கள் உள்ளது என்றால் 5 நபர்களின் பெயரில் உள்ளது. பி பட்டிகை சொத்தில் உரிமை இருப்பதை காட்டுவதற்கு நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தம்பி பத்திரத்தில் எனது அப்பா வழிப்பாதையை காட்டியுள்ளார். மேற்படி பாதையை பொறுத்து எனது தம்பிக்கு மட்டுமே எனது அப்பா எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தம்பி பெயரில் இருக்கும் குறிப்பிட்ட வழிப்பாதைக்கான ஆவணத்தின் படி அந்த சொத்து அவருக்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான்.

8. எனது தம்பின் சொத்திற்கு மேற்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் சூசைமரியான் பெயரில் உள்ளது. சூசைமரியானுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 மகன்கள் ஆவர். மேற்படி 2 நபர்களுக்கும் சொத்து எழுதிவைக்கப்பட்டுள்ளதா என்றால் எழுதிவைக்கப்பட்டுள்ளது, ஆவணம் உள்ளது. அவர்களின் ஆவணப்படியான சொத்து அவர்களுக்கானது என்றால் சரிதான். அதற்கு மேற்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் ஞானபிரகாசத்தின் சொத்து உள்ளது. ஞானபிரகாசத்திற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் ஆவர். எனது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 1034/23 ஏ ஆகும்.

9. 1 ஆம் பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் அதே சர்வே எண் தான். நான் வழிப்பாதையாக கோரும் இடம் ஆவணப்படி உள்ள வழிப்பாதையா அல்லது சர்வே வரைபடத்தின் படி உள்ள வழிப்பாதையா என்றால் ஆவணத்தின் படி உள்ள வழிப்பாதையாகும். புதிய சர்வே படி பாதை எவ்வளவு அகலம் உள்ளது என்றால் 10 அடி அகலம் உள்ளது. நான் சொல்வது போல் சர்வே வரைபடத்தில் 10 அடி அகலத்திற்கு பாதை இல்லை என்றாலும் பி பட்டிகையாக சொல்லக்கூடிய பாதை எனது சொத்தின் எந்த வகையிலும் வந்து சேராது என்றால் சரியல்ல. 3 குடும்பத்தினரும் அமைதியாகவும் நல்லமுறையில் வழிப்பாதையை அனுபவித்து வந்தனர் என்றாலும் எனது கணவரின் சொத்தோடு உள்ள மேற்கு பக்க சுவரை இடித்து பி பட்டிகை சொத்தோடு சேர்த்ததால் தான் தாவா பிரச்சனை எழுந்தது என்றால் சரியல்ல.

10. தாவா வழக்கு எனது சொத்திற்கு வழிப்பாதையை உருவாக்குவதற்கே போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சரியான வரைபடத்தோடு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் சொத்திற்கு மேற்கு பக்கத்தில் இருக்கும் மதில் சுவரை கூட வழக்கு பட்டிகை சொத்தாக காட்டி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**